# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ்நாடு தொலைத் தொடர்பு ஒப்பந்த ஊழியர் சங்கம்
### தமிழ் மாநிலம்

# வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

## வேலூரில் பணி நீக்கம் செய்யப்பட்ட ஒப்பந்த ஊழியர்களுக்கு மீண்டும் பணி ...

அன்புமிக்க தோழர்களே,

வேலூர் மாவட்டத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட ஒப்பந்த ஊழியர்களை மீண்டும் பணிக்கு எடுக்கக்கோரி செப்டம்பர் 15, 2014 முதல் காலவரையற்ற உண்ணாவிரதத்தை நமது மாநிலத் தலைவர்கள் மேற்கொண்டனர்.

செப்டம்பர் 16 அன்று தமிழகம் முழுவதும் ஒப்பந்த ஊழியர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் எழுச்சியுடன் கலந்து கொண்டனர். அதோடு சென்னை தலைமைப் பொது மேலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற பெருந்திரள் உண்ணாவிரதத்தில் 1500க்கும் மேற்பட்ட ஒப்பந்த ஊழியர்கள் நெஞ்சில் கனலுடன் கலந்துகொண்டு ஒரு வரலாற்றைப் படைத்தனர்.

நியாயமான நமது போராட்டத்தை புரிந்துகொண்ட மாநில நிர்வாகம் பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. வேலூரில் பணி நீக்கம் செய்யப்பட்ட ஒப்பந்த ஊழியர்களில் முதல் கட்டமாக 85 தோழர்களை விரைவில் பணிக்கு எடுக்க மாநில நிர்வாகம் ஒப்புக்கொண்டது. மீதமுள்ள 20 தோழர்களை பணிக்கு எடுக்க பரிசீலிக்கவும் மாநில நிர்வாகம் ஒப்புக்கொண்டது.

வேலூரில் ஒப்பந்த ஊழியர்களை பணிக்கு எடுக்க டெண்டர் கோரப்பட்டது. டெண்டர் நடைமுறைகள் எல்லாம் முறைப்படி நடத்தப்பட்டு 70 ஒப்பந்த ஊழியர்களை வேலூர் நிர்வாகம் நவம்பர் 3ம் தேதி முதல் பணிக்கு எடுத்துள்ளது. மாநில நிர்வாகம் ஒப்புக்கொண்டதின் அடிப்படையில் 2 வாரங்களில் 15 தோழர்களை பணிக்கு எடுக்கவும் வேலூர் நிர்வாகம் வாக்குறுதி கொடுத்துள்ளது.

முதல் கட்டமாக 70 ஒப்பந்த ஊழியர்கள் பணியில் சேர்ந்தது நமது மாபெரும் போராட்டத்திற்கு கிடைத்திட்ட வெற்றியாகும். பணி நீக்கம் செய்யப்பட்டவர்களை பாதுகாப்போம் என நமது மாநிலச் சங்கங்கள் கொடுத்த வாக்குறுதியை நாம் நிறைவேற்றியுள்ளோம். இதற்கு அடிப்படையான காரணம் நமது வலுமிக்க எழுச்சியான, உணர்வுகரமான, புரட்சிகரமான பெருந்திரள் உண்ணாவிரத போராட்டமாகும்.

நமது நியாயத்தை புரிந்து கொண்டு பிரச்சனை தீர உதவிய மாநில நிர்வாகத்திற்கும், குறிப்பாக தலைமைப் பொது மேலாளர் அவர்களுக்கும் நமது நன்றியினை உரித்தாக்குகிறோம். அதே போல் வேலூர் மாவட்ட நிர்வாகமும் நமது கோரிக்கையின் நியாயத்தை புரிந்து கொண்டு உத்தரவு வெளியிட்டதற்கு நன்றிகள். தொடர்ந்து கொடுத்த வாக்குறுதியினை வேலூர் மாவட்ட நிர்வாகம் நிறைவேற்ற வேண்டுமென வேண்டுகிறோம்.

இந்த போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்ட அத்துனை தோழர்களுக்கும் இரண்டு மாநில சங்கங்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறோம்.

தோழமையுடன்

-sd-

C.வினோத்குமார் A.பாபுராதாகிருஷ்ணன்

மாநிலச் செயலர்கள்